www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11T

விருதுநகர் மாவட்டம்

காலாண்டு பொதுத்தேர்வு - 2024

-----

வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **14×1=14**

1) 'கபாடபுரங்களை காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்' - அடி மோனையைத் தெரிவு செய்க
அ) கபாடபுரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) தவறான இணையைத் தேர்வு செய்க
அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
இ) கடல் + அலை - உயிர் + மெய் ஈ) மண் + வளம் - மெய் + மெய்

3) மண்ணுக்கு வளம் சேர்ப்பன
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

4) பிழையான தொடரைக் கண்டறிக
அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்
ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வுதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்
இ) குறைந்த எட்டுத் தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது
ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

5) கூற்று - 'கோடு' என்பது தமிழ்சொல் ஆகும்.
விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு
அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

6) ஒப்புரவு என்பதன் பொருள்
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

7) சரியான விடையைத் தேர்க

| | |
|---|---|
| அ) இளமையில் கல் | 1) தொல்காப்பிய சிறப்புப் பாயிரம் |
| ஆ) கல்வி அழகே அழகு | 2) திருமந்திரம் |
| இ) பாடல் போற்றல் கேட்டவை நினைத்தல் | 3) ஆத்திச்சூடி |
| ஈ) துணையாய் வருவது தூயநற்கல்வி | 4) நாலடியார் |

அ) அ-2, ஆ-3, இ-4, ஈ-1 ஆ) அ-3, ஆ-4, இ-1, ஈ-2
இ) அ-4, ஆ-3, இ-2, ஈ-1 ஈ) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

8) தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

9) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

10) உறுபகை, இடன் ஆகிய சொற்களில் இலக்கணக் குறிப்பு
அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப் போலி ஆ) வினைத் தொகை, இடவாகு பெயர்
இ) வினை யெச்சம், வினைத் தொகை ஈ) பெயரெச்சம், பண்புத் தொகை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11) திருக்குறளின் சிறப்பினை விளக்கப்புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு

அ) முதுமொழி மாலை ஆ) திருவள்ளுவமாலை

இ) திருமந்திர மாலை ஈ) இரட்டை மணிமாலை

12) பள்ளி இறுதி வகுப்பு - மாநில அளவிலான பொதுத்தேர்வில் நடைமுறைக்கு வந்த ஆண்டு

அ) 1859 ஆ) 1857 இ) 1910 ஈ) 1911

13) 'காழ்வரை நில்லாக் கடுஞ்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு' - பாடல் இடம் பெற்ற நூல்

அ) கலித்தொகை ஆ) திருக்குறள் இ) நற்றினை ஈ) புறநானூறு

14) கெடுக - இலக்கணக்குறிப்பு தருக.

அ) வினைத் தொகை ஆ) வினையாலனையும் பெயர்

இ) வியங்கோள் வினைமுற்று ஈ) தொழிற்பெயர்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3×2=6**

15) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

16) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

17) சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

18) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

20) உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22) **தொடரில் உள்ள சொற்கள் ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்

23) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

கலை, களை, கழை

24) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நின்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்

25) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

நஞ்சிருக்கும்

26) **கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

அ) Document ஆ) Classical Language

27) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

அ) வாடகை ஆ) சந்தோஷம்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



28) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) அரும்பொருள் ஆ) இழுக்கின்றி

29) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) மறுத்து ஆ) துஞ்சல்

30) ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2×4=8

31) சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33) 'ஏவல் மறுக்கும் சிறுவினா யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனர் கொல்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2×4=8

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

38) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3×4=12

39) வேற்றுமையணி (அல்லது) பிறதுமொழிதல் அணி

40) இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

- பாரதியார்

41) பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்படுத்தி எழுதுக.

அ) வாய்மையே வெல்லும்

(அல்லது)

ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

42) தமிழாக்கம் தருக.


i) Knowledge rules the world

ii) took deep into nature and then you will understand everything better

iii) Looking at beauty in the world is the first step of purifying the mind

iv) Culture does not make people, people make culture

43) கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.




44) பொதுவியல் திணையைச் சான்று தந்து விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி **3×6=18**

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே', என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்கு

46) அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வின் உயர்த்தும். இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

47) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி - V

48) அடி பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. **4+2=6**

அ) 'சிறகிலிருந்து பிரிந்த எனத் தொடங்கும் காவியம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) செயல் என முடியும் குறளை எழுதுக.

- - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com